தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.40/பேரூ/2022

நாள் 09.05.2022

திரு. M. சிவா,
கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கும்முடிப்பூண்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பழைய கும்முடிப்பூண்டி கிராமம், எண்.06, சந்து தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. சிவா என்பவரின் 21.03.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.03.2022ல் பெறப்பட்டு, 40/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பழைய கும்முடிப்பூண்டி கிராமம், எண்.06, சந்து தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சிவா என்பவர் தமது 21.03.2022 நாளிட்ட புகார் மனுவில் கும்முடிப்பூண்டி பேரூராட்சியின் செயல் அலுவலரான திருமதி. ப. யமுனா என்பவர் உண்மைக்கு மாறாகவும், இயற்கை நீதிக்கு விரோதமாகவும், சட்ட விரோதமாகவும் செயல்பட்டு கையூட்டு பெற்றுக்கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்து 2021ஆம் ஆண்டில் அவரது அக்கா மகனும் பூந்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த நித்தியானந்தம் என்பவரின் மகனுமான திரு. வரபிரசாத் என்பவருக்கு அலுவலக உதவியாளர் பணி நியமன உத்தரவு வழங்கியுள்ளார் என்றும், அதேபோல பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிசெய்து வரும் பாலாஜி என்பவரின்

அண்ணனும் திருவள்ளூரில் வசித்துவரும் வெங்கடேசன் என்பவரின் மகனுமான திரு.கார்த்திக் என்பவருக்கு குடிநீர் வழங்கல் பணியாளர் பணிநியமன உத்தரவு வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இது சம்மந்தமாக மனுதாரர் தனது 23.8.2021 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள விவரங்கள் வருமாறு:—

கடந்த 30.09.2020 அன்று பேரூராட்சி அலுவலகத்திற்கு தான் சென்றபோது அலுவலக உதவியாளர்—1, தூய்மைப் பணியாளர்—2 ஆகிய மூன்று பணியிடங்களுக்கு செயல் அலுவலர் திருமதி. யமுனா அவர்கள் முன்னிலையில் நேர்காணல் நடப்பதை அறிந்ததாகவும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, முறையான விளம்பரங்கள் ஏதுமின்றி மறைமுகமாக நேர்காணல் நடத்துகிறீர்களே என தான் கேட்டதற்கு உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என கூறியதாகவும், தான் இது சம்மந்தமாக 9.10.2020 அன்று பதிவுத் தபால் மூலம் உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு அளித்ததால், மேற்படி நேர்காணலின் முடிவுகளை வெளியிடவில்லை என்றும், பின்னர் 2021 ஏப்ரல் மாதம் 6ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் முடிந்தபின்

(i) மேற்படி நேர்காணலில் கலந்துகொள்ளாத, எந்தவித பணிநியமனத்திற்கும் விருப்ப மனு கொடுக்காதவர்களான கும்முடிப்பூண்டியிலிருந்து 60 கி.மீ தூரத்திலுள்ள பூவிருந்தவல்லியில் வசித்துவரும் செயல் அலுவலர் யமுனா அவர்களின் அக்கா மகனுமான வரபிரசாத் ஏன்பவருக்கு அலுவலக உதவியாளராக பணி நியமனமும்; அதேபோன்று

(ii) திருவள்ளூர் அருகில் வசித்துவரும் திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் பாலாஜி என்பவரின் அண்ணன் கார்த்திக் என்பவருக்கு குடிநீர் வழங்கல் பணியாளராக

பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும், இருவரும் 2021 ஜனவரி மாதத்தில் பணி நியமனம் செய்ததுபோல் ஆவணங்கள், வருகைப் பதிவேடு உள்ளிட்ட அனைத்தையும் தயார் செய்துள்ளனர் என்றும், தேர்தல் முடிந்த பிறகு மூன்றுமாத சம்பளம் சேர்த்து வழங்கியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சட்ட விதிமுறைகள் மீறல்களுடன் செய்யப்பட்ட பணி நியமனமானது திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. அ. வில்லியம் ஜேசுதாஸ் மற்றும் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. ப. யமுனா ஆகிய இருவரும் கூட்டு சேர்ந்து லட்சக் கணக்கில் பணம் ஆதாயம் அடைந்து, அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். இதனால் கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் தினக்கூலிகளாக சுய உதவிக் குழுக்கள் மூலமாக பல வருடங்கள் குறைந்த கூலியில் பணிசெய்துவரும் உள்ளூர் வாசிகளுக்கு பணி மறுக்கப்பட்டுள்ளது என்றும், குடிநீர் வழங்கல் பணியாளர் திரு. கார்த்திக் என்பவரை உள்ளூர்வாசிகளுக்குத் தெரியாமல் இருக்கவேண்டி கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் சம்பளம் பெற்றுக்கொண்டு, திருமழிசை பேரூராட்சியில் பணிசெய்து வருகிறார் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இதுசம்மந்தப்பட்ட கும்முடிப்பூண்டி பேரூராட்சி அலுவலக ஆவணங்களையும், நடைமுறை செயல்முறைகளின் ஆவணங்களையும்

ஆய்வுக்குட்படுத்தினால் மேற்படி விதி மீறல்கள் அனைத்தும் தெரியவரும் என்பதால், இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு, விதி மீறல்கள் மூலம் பணிநியமனங்களை மேற்கொண்ட பேரூராட்சி செயல் அலுவலர் மீது குற்றவியல் நடவடிக்கையும், துறை ரீதியான நடவடிக்கையினையும் எடுக்க உரிய ஆணைகளைப் பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

மனுதாரர் தனது புகார் மனுவுடன் 9.10.2020ல் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அளித்துள்ள புகார் மனு, கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் மனுதாரருக்கு அளித்துள்ள 13.8.2021 நாளிட்ட பதில் அறிக்கை ஆகியவற்றின் நகல்களை தனது புகாருக்கான ஆதார ஆவணங்களாக இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரரின் மேற்கண்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தினால் ஏற்கப்பட்டு, மேற்கண்ட புகார் மனு மீதான விசாரணையை 27.4.2022 அன்று மேற்கொள்ளலாமென முடிவு செய்ததன் அடிப்படையில், மனுதாரர் மற்றும் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கான அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக 20.4.2022 அன்று அனுப்பிவைக்கப்பட்டன.

3. மனுதாரர் திரு. M. சிவா 27.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் ”கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் காலியாக இருந்த 1 அலுவலக உதவியாளர் பணியிடம் மற்றும் 2 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்பும்போது முறைப்படி நாளிதழில் விளம்பரம் செய்யாமலும், பேரூராட்சி அறிவிப்புப் பலகையில் விளம்பரம் இடம்பெறாமலும், மேலும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முறையாக பட்டியல் பெறாமலும், இன சுழற்சி முறையை மேற்கொள்ளாமலும், மேற்கண்ட 3 பணியிடங்களை முறைகேடாக நிரப்பியுள்ளனர். மேற்கண்ட பணியிடங்களை நிரப்பும்போது கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றும் திருமதி. யமுனா என்பவரின் அக்கா மகனுக்கு மேற்கண்ட பணியிடங்களில் ஒன்றான அலுவலக உதவியாளர் பணியிடம் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முறைப்படி விளம்பரம் செய்யாமல் நேர்காணல் நடத்தி பணியாளர்களை மறைமுகமாக தேர்வு செய்வதால் பலபேர் சிரமப்படுகிறார்கள். எனவே, மேற்கண்ட முறைகேடாக நடைபெற்ற நேர்காணல் மற்றும் பணியிடம் வழங்கியது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு தவறு செய்த அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் திரு. கார்த்திக் எனும் குடிநீர் பணியாளர், கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் தற்போது பணியில் இல்லை. ஆனால் அவருக்கு கும்முடிப்பூண்டி பேரூராட்சியின் மூலம் மாதாந்திர ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது என்பதையும், இது குறித்தும் விசாரித்து உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4. கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரியும் திருமதி. ப. யமுனா என்பவர் 27.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் காலியாக இருந்த 2 தூய்மைப்

பணியாளர் மற்றும் 2 குடிநீர் பணியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்திட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக அறிவிப்பு நாள் 7.11.2019ன்படி மாவட்ட அளவில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, 9.11.2019ல் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. அதேபோன்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 2 தூய்மைப் பணியாளர் மற்றும் 2 குடிநீர் பணியாளர் பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பெயர் பட்டியல் 13.12.2019 அன்று பெறப்பட்டும், நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டும், பேரூராட்சி தகவல் பலகையில் விளம்பரமும் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் 18.1.2021ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இனசுழற்சிமுறை போன்ற உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு 2 தூய்மைப் பணியாளர் பணியிடங்களில் 1 பணியிடமும், 2 குடிநீர் பணியாளர் பணியிடங்களில் 1 பணியிடமும் நிரப்பப்பட்டுள்ளன.

நிரப்பப்படாத பணியிடங்கள் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு தினபூமி நாளிதழில் 06.8.2020 அன்று செயல் அலுவலரால் விளம்பரம் செய்யப்பட்டது. SC (A)க்கான (தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த அருந்ததியர்) தூய்மைப் பணியாளர் பணியிடத்திற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் SC (A) பெயர் பட்டியல் கேட்கப்பட்டு, பெயர் பட்டியல் திருவள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து மாநில அளவில் பட்டியல் வரப்பெற்றதைத் தொடர்ந்து, பட்டியலில் இடம்பெற்றிருந்த நபர்களை நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டு, அவை தனியர்களால் பெறப்பட்ட நிலையில், அவர்களில் யாருமே நேர்காணலில் கலந்துகொள்ளவில்லை. எனவே, மேற்கண்ட பணியிடம் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட பணியிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. வரபிரசாத் என்பவர் எனது சகோதரி மகன் என்பது முற்றிலும் தவறானதாகும். எனது சகோதரிக்கு வரபிரசாத் என்கின்ற மகனே இல்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் மேலும், திரு. கார்த்திக் என்பவர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் பாலாஜி என்பவரின் சகோதரர் என்ற தகவல் எனக்குத் தெரியாது.

அதேபோன்று மனுதாரர் குறிப்பிட்டுள்ள கார்த்திக் எனும் குடிநீர் பணியாளர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆணையின்படி திருமழிசை பேரூராட்சி அலுவலகத்தில் மாற்றுப்பணியில் (Diversion) பணியாற்றிவருவதால் அவருக்கு கும்முடிப்பூண்டி பேரூராட்சியின் மூலம் மாதாந்திர ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட நிகழ்வு தொடர்பான விளம்பர நகல்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியல் நகல், நேர்காணல் கடிதங்களின் நகல்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**5.** கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது மேற்கண்ட புகார் மனு குறித்து அளித்துள்ள தமது விளக்க அறிக்கையில் கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் காலியாக இருந்த நிலையாக்கப்படாத

இரண்டு தூய்மைப் பணியாளர் மற்றும் இரண்டு குடிநீர் பணியாளர் பணியிடங்களைப் பூர்த்தி செய்திட மாவட்ட மற்றும் மண்டல அளவில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களால் தொகுத்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக அறிவிப்பு ந.க.எண்.1658/2019/அ2 நாள் 7.11.2019ன்படி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர் மூலம் 9.11.2019 நாளிட்ட "தினத்தந்தி" நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பித்தவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் இடம்பெற்ற நபர்களுக்கு 10.2.2020 அன்று நேர்காணல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தூய்மைப் பணியாளர் மற்றும் ஒரு குடிநீர் பணியாளர் பணியிடம் போக திரு. முனுசாமி, தூய்மைப் பணியாளர் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலி பணியிடத்தையும் சேர்த்து இரண்டு தூய்மைப் பணியாளர் பணியிடம் மற்றும் 27.12.2019 முதல் பேரூராட்சியில் காலியாக இருந்த அலுவலக உதவியாளர் பணியிடம், ஆகமொத்தம் மூன்று பணியிடங்களைப் பூர்த்தி செய்திட பேரூராட்சியின் அறிவிப்பு நாள் 30.7.2020 மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டு 6.8.2020 நாளிட்ட "தினபூமி நாளிதழில்" பிரசுரிக்கப்பட்டு, தகுதியான நபர்களிடமிருந்து 20.8.2020ம் தேதிக்குள் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டதென்றும், மேலும் பேரூராட்சியின் அலுவலக விளம்பரப் பலகையிலும் அறிவிப்பினை ஒட்டி விளம்பரப்படுத்தப்பட்டதென்றும் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதோடு அதன் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தமது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்.

மேலும், மேற்படி பணியிடங்களுக்கு தகுதியான நபர்களின் பட்டியலை அனுப்பிவைத்திடக்கோரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், திருவள்ளூர், பேரூராட்சி கடிதம் ந.க.எண்.112/2020/அ1 நாள் 29.3.2020ன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டார் என்றும், அதன்படி வேலைவாய்ப்பு அலுவலர் கடித எண்.எக்ஸ்.1/41/2020 நாள் 7.9.2020ன்படி பரிந்துரைத்து அனுப்பிவைக்கப்பட்டதென்றும், வேலைவாய்ப்பு அலுவலகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் மற்றும் தினபூமி செய்தித்தாள் விளம்பரம் மூலம் விண்ணப்பித்த நபர்கள் என மொத்தம் 6 நபர்களை ஒருங்கிணைத்து பட்டியல் தயாரிக்கப்பட்டு, பேரூராட்சி கடிதம் எண்.ந.க.112/2020/அ1 நாள் 18.9.2020ல் 30.09.2020 அன்று காலை 11.00 மணிக்கு நேர்காணலில் கலந்துகொள்ள நேர்காணலுக்கான அழைப்பாணை கடிதம் அனைவருக்கும் அனுப்பப்பட்டது. அதில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களால் வழங்கப்பட்ட ஊனத்தின் குறியீடு VI அடையாள அட்டை எண்.50520 மாற்றுத் திறனாளி பதிவு எண்.34133 கொண்ட திரு. என். வரப்பிரசாத், த/பெ சி.டி நித்யானந்தன் என்பவரின் MBC Priority மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் முழுப் பொருத்தமும், தகுதியும் பெற்றிருந்ததால், அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு அவர் தேர்வு செய்யப்பட்டார் என்றும், மேலும் திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்/தனி அலுவலர், கும்முடிப்பூண்டி பேரூராட்சியின் தீர்மானம் எண்.190 நாள் 18.1.2021ல் தேர்வான பணியிடம்

அங்கீகரிக்கப்பட்டு, இதர நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றி பணி நியமன ஆணை வழங்கி உத்தரவிடப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூற்றின் அடிப்படையில் பணிநியமனங்களில் எவ்விதமான முறைகேடுகளும் நிகழாவண்ணம் அனைத்து நடைமுறைகளும் முறையாக பின்பற்றப்பட்டுள்ளன. மனுதாரர் தெரிவித்துள்ளதுபோல் எந்தவித அறிவிப்பும் இல்லாமலும், விளம்பரமும் இன்றி நேர்காணல் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானதாகும். மேலும், இதுகுறித்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களிடமிருந்தோ, நேர்காணலில் கலந்து கொண்டவர்களிடமிருந்தோ மற்றும் பொதுமக்களிடமிருந்தோ எவ்விதமான புகார்களோ, ஆட்சேபனைகளோ வரவில்லை என்றும் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது விளக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம் மற்றும் கூடுதல் எழுத்துபூர்வ வாக்குமூலம், கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள், மன்றத் தீர்மானங்கள், செயல்முறை ஆணையின் நகல்கள், இதர கடிதத் தொடர்புகள், ஒப்புகை அட்டைகள் மற்றும் இதர ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- ❖ கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிநியமனங்கள் குறித்து எந்தவித விளம்பரமோ, அறிவிப்போ ஏதுமின்றி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் ஆகியோர் கையூட்டுப் பெற்றுக்கொண்டு முறைகேடாகவும், செயல் அலுவலரின் அக்கா மகனுக்கு அலுவலக உதவியாளர் பணியிடமும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் பாலாஜி என்பவரின் அண்ணனும், திருவள்ளூரில் வசித்துவரும் திரு. வெங்கடேசன் என்பவரின் மகனுமான திரு. கார்த்திக் என்பவருக்கு குடிநீர் வழங்கல் பணியாளர் பணியிடமும் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளதால், இது குறித்து விசாரணை மேற்கொண்டு ஆணையிடக்கோரி மனுதாரரான திரு. M. சிவா என்பவரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ மனுதாரரின் புகார் குறித்து கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் காலியாக இருந்த 2 தூய்மைப் பணியாளர் மற்றும் 2 குடிநீர் பணியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்திட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக அறிவிப்பு நாள் **7.11.2019**ன்படி மாவட்ட அளவில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, **9.11.2019**ல் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதென்றும், மேலும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து மேற்கண்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பெயர் பட்டியல் **13.12.2019**ல் பெற்றும், அதனடிப்படையில் இனசுழற்சிமுறை போன்ற உரிய நடைமுறைகள் யாவும் பின்பற்றப்பட்டு, பணிநியமனங்கள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். 10.02.2020 அன்று நடைபெற்ற நேர்காணலில் கலந்துகொண்டவர்களில் திரு. சி. செல்வம் என்பவர் தூய்மைப் பணியாளர் பணியிடத்திற்கும், திரு. வெ. கார்த்திக் குடிநீர் பணியாளர் பணியிடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டார் என்றும், எனவே, பேரூராட்சியில் காலியாக இருந்த 2 தூய்மைப் பணியாளர் பணியிடங்களில் 1 பணியிடமும், 2 குடிநீர் பணியாளர் பணியிடங்களில் 1 பணியிடமும் நிரப்பப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

❖ எஞ்சிய நிரப்பப்படாத பணியிடங்கள் மற்றும் 27.12.2019 முதல் பேரூராட்சியில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு "தினபூமி நாளிதழில்" 6.8.2020 அன்று கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலரால் விளம்பரம் செய்யப்பட்டும், வேலை வாய்ப்பு அலுவலர், திருவள்ளூர் அளித்த பட்டியல் ஆகியவற்றின்அடிப்படையில் 6 நபர்களுக்கு 30.09.2020ல் நேர்காணல் நடத்தியதில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், திருவள்ளூர் மாவட்டத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழில் அடையாள அட்டை எண்.50520 மாற்றுத் திறனாளி பதிவு எண்.34133 கொண்ட திரு. என். வரப்பிரசாத் MBC Priority மற்றும் கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு அவருக்கு பணி நியமன ஆணை 21.01.2021ல் வழங்கப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

❖ கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் 27.12.2019 முதல் அலுவலக உதவியாளர் பணியிடம் காலியாக இருந்ததையடுத்து, மேற்கண்ட பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

❖ 6.8.2020ல் அலுவலக உதவியாளர் மற்றும் தூய்மைப் பணியாளர் இடங்களை பூர்த்தி செய்திட கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அறிவிப்பு (விளம்பரம்) "தினபூமி நாளிதழில்" வெளியிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட விளம்பரம் வெளியிடப்பட்ட அன்று ஏழு மாதங்களுக்கு மேலாக அலுவலக உதவியாளர் பணியிடம் நிரப்பப்படாத நிலையில், ஆறு மாதங்களுக்கு மேல் நிரப்பப்படாத பணியிடங்களுக்கு, புத்தாக்கம் (Post Revival) பெற்ற பின்னரே அப்பணியிடம் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். எனினும், இதனை கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் கடைபிடித்து உரிய ஆணையினைப் பெற்றதாக அறியப்படவில்லை. மேலும், அலுவலக உதவியாளர் பணியிடத்தில் திரு. வரப்பிரசாத் என்பவரை தெரிவு செய்து, அவருக்கான பணி நியமன ஆணை 21.01.2021ல் வழங்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட நாள் வரை அப்பணியிடத்தினை புத்தாக்கம் (post revival) செய்து ஆணை பெற்றிருக்கவேண்டும்.

❖ செயல் அலுவலரின் வாக்குமூலத்தின்படி தூய்மைப் பணியாளர் SA (A) (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) பெயர் பட்டியல் திருவள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து மாநில அளவில் பட்டியல் வரப்பெற்றதன் அடிப்படையில், பட்டியலில் இடம்பெற்றிருந்த நபர்களை நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு அழைப்புக் கடிதங்கள் பேரூராட்சியினால் அனுப்பப்பட்டு அவை தனியரால் பெறப்பட்ட நிலையில், நேர்காணலில் யாரும் கலந்துகொள்ளாத காரணத்தினால் தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் (2 பணியிடங்கள் (BC

Priority-1 & GT Non-Priority (Women Destitude widow)-1) இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என்பது ஆவணங்களின்படி தெளிவாகிறது

- ❖ அலுவலக உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்ட திரு. வரபிரசாத் என்பவர் தனது சகோதரி மகன் என்பது முற்றிலும் மறுக்கப்படுவதாகவும்/தவறாகுமென்றும், தனது சகோதரிக்கு வரபிரசாத் என்கின்ற மகனே இல்லை என்றும் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளார். எனவே, மனுதாரரின் இப்புகார் மறுக்கப்படுகிறது. மேலும், அவரும் பணிநியமனம் செய்யப்பட்ட மேற்கண்ட திரு. என். வரபிரசாத் என்பவர் கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலரின் சகோதரி மகன் என்பதற்கான ஆதாரங்கள் எதனையும் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்க மனுதாரர் தவறியுள்ளார்.
- ❖ கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் காலியாக இருந்த 2 தூய்மைப் பணியாளர் மற்றும் 2 குடிநீர் பணியாளர் பணியிடங்களுக்கு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் வெளியிடப்பட்ட 7.11.2019 அறிவிப்பினைத் தொடர்ந்து, வேலைவாய்ப்பு அலுவலக பெயர் பட்டியல், மற்றும் விளம்பரம் ஆகியவற்றின் மூலம் உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, 10.02.2020 அன்று நேர்காணல் நடத்தப்பட்டு, 1 தூய்மைப் பணியாளர் பணியிடமும், 1 குடிநீர் பணியாளர் பணியிடமும் நிரப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. சி. செல்வம் என்பவர் வேலைவாய்ப்பு பட்டியலில் பணி மூப்பு அடிப்படையிலும், இவர் அன்னை அஞ்சுகம் ஆண்கள் சுய உதவிக் குழுவில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்த அனுபவம் பெற்றிருந்த நிலையிலும், இவர் தூய்மைப் பணியாளர் பணிடத்திற்கும், குடிநீர் பணியாளர் பணியிடத்திற்கு மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களது பதிவு அட்டையின்படியும், போதுமான கல்வித் தகுதியின் அடிப்படையிலும் திரு. வெ. கார்த்திக் என்பவரும் தெரிவு செய்யப்பட்டு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்/தனி அலுவலர், கும்முடிப்பூண்டி பேரூராட்சி தீர்மான எண்.189 நாள் 18.1.2021ல் அங்கீகரிக்கப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டதாக கும்முடிப்பூண்டி பேரூரரட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் விதிமுறைகளுக்கு புறம்பாகவும், சட்டவிரோதமாகவும், செயல் அலுவலர் கையூட்டு பெற்றுக்கொண்டு, அதிகார துஷ்பிரயோகம் மூலம் அலுவலக உதவியாளர் மற்றும் குடிநீர் வழங்கு பணியாளர் பணி நியமனங்களை மேற்கொண்டுள்ளார் என்றும், செயல் அலுவலர் தனது அக்கா மகன் திரு. வரபிரசாத் என்பவருக்கு அலுவலக உதவியாளர் பணியிடத்தையும், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றிவரும் திரு. பாலாஜி என்பவரின் அண்ணன் மகன் திரு. கார்த்திக் என்பவருக்கு குடிநீர் வழங்கு பணியாளர் பணிநியமனமும் செய்துள்ளதாக திரு. M. சிவா என்பவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் நிரூபணமாகவில்லை. எனவே மனுதாரரின் புகார் மனுவினை தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

கும்முடிப்பூண்டி பேரூராட்சியால் நிரப்பப்பட்டுள்ள பணியிடங்களில் அலுவலக உதவியாளர் பணியிடம் ஆறு மாதங்களுக்கு மேல் நிரப்பப்படாத நிலையில், அப்பதவியை புத்தாக்கம் செய்து ஆணை பெறாமல், கும்முடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலரால் விளம்பரம் செய்து நிரப்பப்பட்டுள்ளது ஆவணங்களின்படி தெரியவருவதால், அப்பதவியை நிரப்பியுள்ளது விதிமுறைகளுக்கு மாறாக உள்ளதால் இந்நியமனம் குறித்து ஒரு குழுவினை அமைத்து பேரூராட்சியிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் அப்பதவி நிரப்பப்பட்டது குறித்த அறிக்கையினை பெற்று மேல் நடவடிக்கையை தொடருமாறு பேரூராட்சிகளின் ஆணையாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அலுவலக உதவியாளர் பணியிடம் தவிர இதர பணியிடங்களான தூய்மை பணியாளர் மற்றும் குடிநீர் பணியாளர் நியமனங்கள் யாவும் உரிய விதிமுறைகளின்படியே மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள நியமனப் புகார்களை நிராகரித்தும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, மே திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. M. சிவா, த/பெ மணி,
எண்.06 சந்து தெரு, பழைய கும்முடிப்பூண்டி கிராமம்,
கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்–601 201

செயல் அலுவலர்,
கும்முடிப்பூண்டி பேரூராட்சி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்–601201

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர்

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

11/5/22

செயலர்

11.5.22